(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 61.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 21 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

17/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை;

(ii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ள பெண்களில் தாய்மாரின் எண்ணிக்கை;

(iii) வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இலங்கைக்கு மீள வருகைதந்துள்ள மற்றும் உயிரிழந்துள்ள பெண்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பராயமடையாத பிள்ளைகள் உள்ள தாய்மார் வெளிநாடு செல்வதன் காரணமாக அவர்களின் பிள்ளைகளுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பராயமடையாத பிள்ளைகள் உள்ள பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்வதைத் தடுக்க அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

69/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப யாது;

(ii) மேற்படி அரிசி இறக்குமதி செய்யப்பட்ட விலைகள் யாவை;

(iii) மேற்படி அரிசி சந்தைக்கு வழங்கப்பட்டுள்ள முறை யாது;

(iv) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வருடாந்தம் சந்தைக்கு வழங்கப்பட்டுள்ள அளவுகள் மற்றும் விலைகள் வெவ்வேறாக யாவை;

(v) 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் லக் சதொசவினால் தனியார் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது;

(vi) மேற்படி ஒரு கிலோ அரிசிக்காக செலுத்தப்பட்ட பணத்தொகை யாது;

(vii) மேற்படி அரிசியைக் கொள்வனவு செய்த வர்த்தக நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

127/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண சபையினால் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை வழங்கியுள்ள உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) காணி உறுதிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) இந்தக் காணி உறுதிகளை வழங்குவதற்கு ஊவா மாகாண சபை பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

197/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியா, யப்பான், பிரான்ஸ், சீனா, இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நியமிக்கப்பட்ட தூதுவர்கள் அல்லது உயர்ஸ்தானிகர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்களில் இலங்கை வெளிநாட்டு சேவையில் இடம்பெறும் மற்றும் வெளிநாட்டு சேவையில் இடம்பெறாத அலுவலர்கள் தனித்தனியே யாவர் என்பதையும்;

(iii) நியமனம் செய்யப்பட்ட திகதியளவில் வெளிநாட்டு சேவையில் இடம்பெறும் அலுவலர்கள் இலங்கை வெளிநாட்டு சேவையில் பெற்றிருந்த அனுபவம் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) நியமனம் செய்யப்பட்ட திகதியளவில் வெளிநாட்டு சேவையில் இடம்பெறாத அலுவலர்கள் கொண்டிருந்த கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

5.

234/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலேவெல பிரதேசத்தில் இஹல லிக்கல எனும் பெயரில் கிராமமொன்று உள்ளதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பெரும்பான்மையான குடும்பங்கள் செங்கல் தயாரித்து வாழ்க்கையைக் கொண்டுநடாத்துகின்றனர் என்பதையும்;

(iii) நிலவுகின்ற கடும் வறட்சி, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்தல் ஆகியன காரணமாக தற்போது இக்கிராமத்தின் மக்கள் மேற்படி கைத்தொழிலை மேற்கொள்வதில் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கின்ற நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

248/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

331/ ' 18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் கூடங்களில் பெரும் குறைப்பாடு உள்ளதென்பதையும்;

(ii) மழைக் காலங்களில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் மேற்படி பயணிகள் கூடங்களை பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(iii) தற்போதுள்ள பயணிகள் கூடங்கள் உரிய தரத்தில் தயாரிக்கப்படாமையினால் சீர்குலைந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அத்தியவசியமான இடங்களில் பயணிகள் கூடங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

350/ ' 18

கௌரவ முஹம்மது நசீர்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பயங்கரவாத வன்முறையோ அல்லது இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மற்றும் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அரசாங்கத்தின் புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்றும் வேலைத்திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கமைய, 2009 ஆம் ஆண்டு முதல் இது வரை அவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் பிரதேச செயலக வாரியாகவும் தனித்தனியாக குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

361/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானை தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

10.

399/ '18

கௌரவ எஸ்.சி. முத்துகுமாரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை,

(i) மகாவலி 'எச்' வலயத்திற்கு நீர்ப்பாசன நீர் கிடைக்கின்ற மகாவலியின் மேற்பக்க நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள பிரதேசங்களுக்கு கிடைத்த மழைவீழ்ச்சி ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் யாது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் பயிர்செய்யப்பட்ட வயற் காணிகளின் அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) நீர்ப் பற்றாக்குறை காரணமாக பயிர்செய்ய முடியாதுபோன விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிவாரணம் வழங்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(ii) மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்து விளைச்சல் கிடைக்கும் வரை இந்த நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

415/ '19

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுங்கத் திணைக்களத்தில் உற்பத்தி வரி பரிசோதகர் தரத்திலான பதவிகள் உருவாக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) 2000.03.27ஆம் திகதி உற்பத்தி வரிப் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதம் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி (நிருவாகம்) யினால் கையொப்பமிடப் பட்டிருப்பது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாகவா இன்றேல், உற்பத்தி வரி பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாகவா;

(iii) உற்பத்தி வரிச் சட்டத்தின் கீழ் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மாத்திரம் அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லையென 2016.03.23 ஆம் திகதிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் 10 ஆம் இலக்க பணிப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், இச்சட்டத்தின் கீழ் செயற்பட அதிகாரமற்ற சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சுங்கத் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கான சம்பளத்தை வழுவுள்ளதாகத் தெரிவித்து கடிதம் ஒன்றை வழங்குவதற்கான அதிகாரம் இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) அதில், குறித்த பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் ரூபா 50,520/- 7x1320 - 10x1560=75,360/- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அப்போதைய நிலையில் சுற்றறிக்கை 2/97 iii இன்படி பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டமான ரூபா 85,440/- 5x2460=97,740/- இல் வருடாந்த சம்பளம் ரூபா 95,280/- என செலுத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) இன்றேல், அதனைத் திருத்துவதற்கு எடுக்கப்படும் துரித நடவடிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

458/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்கிவரும், புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகள், மத்திய மருந்துச்சாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வோர் இடத்தினதும் பெயர் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் சேவையிலீடுபட்டுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iv) மேற்படி சுகாதார நிலையங்களில் ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

(vi) மேற்படி சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

486/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விளையாட்டு மைதானங்களின் பெயர்கள் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி விளையாட்டு மைதானங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது;

(v) மேற்படி விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் யாது;

(vi) கண்டி மாவட்டத்தில் ஏனைய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

512/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறையில் அமைந்துள்ள மெதொடிஸ்த ஆலயம் அமைக்கப்பட்டு எழுபது வருடங்களாகின்றது என்பதையும்;

(ii) மேற்படி வழிபாட்டுத்தலம் அமைந்துள்ள காணிக்கு இதுவரையில் சட்ட ரீதியான ஆவணம் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

(iii) 2009 ஆம் ஆண்டு முதல் தேவாலயத்திற்கான நீண்ட கால குத்தகையினைக் கோரி, தேவையான ஆவணங்களைத் தயார்செய்து காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி கோரிக்கை பற்றிய அனைத்து ஆவணங்களும் அம்பாறை பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இதற்கமைய, ஆயிரக்கணக்கான மக்களது மதக் கடமைகளை நிறைவேற்றும் இத்தேவாலயத்திற்கு நீண்டகால காணி உரிமப்பத்திரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

515/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் "பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் (நீக்கல்),— 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நிதி அமைச்சர்,— இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகம் (திருத்தம்),— 1975 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

# பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 14 ஆம் திகதிய 2084/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் - 2019 தொடர்பில், தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 பெப்புருவரி 11 ஆம் திகதிய 2110/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2112/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 6.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1 ),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 35 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 4,800,000,000 இலிருந்து ரூபா. 4,363,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 36 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 470,000,000 இலிருந்து ரூபா. 540,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 545,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 220,000,000 இலிருந்து ரூபா. 230,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 37 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட பொருட்களுக்கான முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 12,000,000 இலிருந்து ரூபா. 27,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,500,000 இலிருந்து ரூபா. 4,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 39,000,000 இலிருந்து ரூபா. 61,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 17.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 38 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "நானாவித முற்பணக் கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 2,500,000 இலிருந்து<br>ரூபா. 530,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 39 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 2,000,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,300,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 40 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 40

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 180,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 150,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 75,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 60,000,000 வரை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 41 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 41

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 350,000,000 இலிருந்து ரூபா. 410,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2018 தொடர்பில், 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுத்தொடர் இலக்கம். 01

2017 அம் ஆண்டின் 30 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00101, 02001, 02501, 14001, 14701, 15501, 16501, 19201, 20101, 20501, 20901, 21501, 22201, 22301, 22401, 22501, 22601, 23101, 24801, 25101, 25801, 25901, 26301, 26601, 27001, 27301, 27701, 28101, 28201, 28401, 28901, 30601, 32401 மற்றும் 33301 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறைகளைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய | நிரல் II இல் ஆகக் கூடிய செலவின் வரையறை (ரூபா) | | நிரல் III இல் ஆகக் குறைந்த பெறுகை வரையறை (ரூபா) | | நிரல் IV இல் ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | அதிமேதகு ஜனாதிபதி | 00101 | | | | | 100,000,000 | 120,000,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | | | 85,000,000 | 95,000,000 | 2 |
| 3. | எல்லை மீள் நிர்ணய ஆணைக்குழு | 02501 | | | 250,000 | 150,000 | | | 3 |
| 4. | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் | 14001 | 15,000,000 | 16,675,000 | | | | | 4 |
| 5. | பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் | 14701 | | | | | 7,000,000 | 7,300,000 | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 15501 | | | | | 35,000,000 | 40,400,000 | 6 |
| 7. | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் | 16501 | 3,000,000 | 3,030,000 | | | | | 7 |
| 8. | சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் | 19201 | | | 108,000,000 | 80,000,000 | | | 8 |
| 9. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 19,400,000 | | | 9 |
| 10. | பொது நம்பிக்கைப் பொறுப்புகள் திணைக்களம் | 20501 | | | 2,200,000 | 2,130,000 | | | 10 |
| 11. | தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம் | 20901 | | | 4,000,000 | 3,400,000 | | | 11 |
| 12. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 21501 | | | 55,000,000 | 48,000,000 | | | 12 |
| 13. | இலங்கைத் தரைப்படை | 22201 | | | 3,028,000,000 | 2,565,000,000 | | | 13 |
| 14. | இலங்கை கடற்படை | 22301 | | | 570,000,000 | 480,000,000 | | | 14 |
| 15. | இலங்கை விமானப்படை | 22401 | | | 460,000,000 | 396,000,000 | | | 15 |
| 16. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,200,000,000 | 1,145,000,000 | | | 16 |
| 17. | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 22601 | | | | | 145,000,000 | 158,000,000 | 17 |
| 18. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 400,000 | 349,133 | | | 18 |
| 19. | மதுவரித் திணைக்களம் | 24801 | | | 37,000,000 | 36,000,000 | | | 19 |
| 20. | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் | 25101 | | | | | 90,000,000 | 90,500,000 | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | | | 65,000,000 | 63,000,000 | | | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், மாத்தளை | 25901 | | | 38,000,000 | 34,000,000 | | | 22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | | | 51,000,000 | 43,000,000 | | | 23 |
| 24. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, வவுனியா | 26601 | | | 13,000,000 | 10,000,000 | | | 24 |
| 25. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | | | 47,000,000 | 45,000,000 | | | 25. |
| 26. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | | | 41,000,000 | 39,500,000 | | | 26. |
| 27. | மாவட்டச் செயலகம், மொணறாகலை | 27701 | | | 34,000,000 | 33,000,000 | | | 27. |
| 28. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | 295,000,000 | 295,320,000 | | | | | 28. |
| 29. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | 260,000,000 | 240,000,000 | 165,000,000 | 145,000,000 | | | 29. |
| 30. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 28401 | | | | | 168,000,000 | 204,000,000 | 30. |
| 31. | ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் | 28901 | | | | | 110,000,000 | 115,000,000 | 31. |
| 32. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | | | | | 1,500,000,000 | 1,520,000,000 | 32. |
| 33. | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | | | 2,200,000 | 2,150,000 | | | 33. |
| 34. | கொம்றோலர் நாயகம் திணைக்களம் | 33301 | | | | | 3,500,000 | 600,000 | 34. |

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

ஒப்பம்/ இரான் விக்ரமரத்ன
பதில் நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 23.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 27.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

29.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.